***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.422/2022 – P.W.1 (LW2)***

| | |
|---|---|
| *Name* | துரைமாணிக்கம் |
| *Father/Husband's Name* | முருகையன் |
| *Village* | உள்ளிக்கோட்டை |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *51* |

**எதிரிகள் 1, 3 ஆஜர். 2, 4 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 23.04.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் என்னுடைய மகன் ஆவார். எதிரிகளை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பவம் நடப்பதற்கு 1 மாத காலத்திற்கு முன்பு எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையில் இடப்பிரச்சினை இருந்து வந்தது. அதன் காரணமாக இருத்தரப்பினர்களும் பரவாக்கோட்டை காவல்நிலையத்தில் புகார் மனு அளித்திருந்தோம். அதன்பேரில் எனது மகன் விக்னேஷ் காவல்நிலையத்தில் 15 நாட்கள் நிபந்தனை கையொப்பம் போட்டுக்கொண்டிருந்தார்.

2. கடந்த 21.09.2022ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் என் மகன் இருச்சக்கர வாகனத்தில் உள்ளிக்கோட்டை மோகன் சிமிண்ட் ஒர்க்ஷாப் அருகில் சென்றுக்கொண்டிருந்தார். நானும் எனது தம்பியும் அவர் பின்னாலேயே இருச்சக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தோம். அப்போது எதிரிகள் என் மகனை வழிமறித்து என் மகனை தேவடியா மவனே குச்சிக்காரி மவனே என்று திட்டி தங்கதுரை தான் வைத்திருந்த இரும்பு கம்பியால் என் மகனை இடது முழங்கையில் தாக்கினார். அதனால் இரத்தக்காயம் ஏற்பட்டது. ராகுல் என்பவர் என் மகனை இடது கை மணிக்கட்டில் அதே கம்பியால் தாக்கினார். மணிக்கட்டிலும் காயம் ஏற்பட்டது. விக்னேஷ் என்பவர் என் மகனை கால் முட்டியில் தாக்கி காயத்தினை ஏற்படுத்தினார். கால்முட்டியிலும் காயம் ஏற்பட்டது. பாஸ்கர் என்பவர் என் மகனின் முகத்தில் இரும்பு கம்பியால் தாக்கி காயத்தினை ஏற்படுத்தினார். இந்த தாக்குதலினால் எனது மகனின் இடது கை நடுவிரலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. பிறகு நால்வரும் என் மகனை பார்த்து என்னைக்கிருந்தாலும் எங்களால் தான்டா உனக்கு சாவு என்று மிரட்டினார்கள். சம்பவத்தினை பார்த்து நாங்கள் தடுக்க ஓடிவந்தபோது எங்களை பார்த்ததும் எதிரிகள்

ஓடிவிட்டனர். எனது மகனை உள்ளிக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்துச் சென்று முதலுதவி சிகிச்சை அளித்து பிறகு மன்னார்குடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்த்தேன். போலிசார் உள்ளிக்கோட்டை மருத்துவமனைக்கு வந்து என் மகனை விசாரித்தார்கள். பிறகு மன்னார்குடி அரசு மருத்துவமனையில் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னையும் போலிசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. என் மகன் விக்னேஷ் தற்போது வெளிநாட்டில் உள்ளார் என்றால் - சரிதான். இந்த வழக்கு சம்பவத்திற்கு ஓராண்டிற்கு முன்பே என் மகன் வெளிநாடு செல்ல முயற்சித்து வந்தார் என்றால் - சரிதான். எங்கள் ஊரில் உள்ள சந்தானகிருஷ்ணன் மகன் ராஜ்குமாருக்கு என் மகளை திருமணம் செய்து வைத்துள்ளோம் என்றால் - சரிதான். சந்தானகிருஷ்ணன் வீட்டிற்கு அருகில் உள்ள இடம் காரணமாக தான் பிரச்சினை என்றால் - சரிதான்.

2. இந்த வழக்கிற்கு முன்பாக உள்ள பிரச்சினை சந்தானகிருஷ்ணனுக்கும் எதிரிகளுக்கும் தான் நடைப்பெற்றது என்றால் - சரிதான். அந்த பிரச்சினையில் இருத்தரப்பினர்களின் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் - சரிதான். அந்த வழக்கு சம்பவத்தில் என் மீதும் என் மகன் மீதும் என் மகன் சம்மந்தி சந்தானகிருஷ்ணன் மற்றும் அவரது மகன் மீதும் இந்த வழக்கின் 1வது எதிரியான தங்கதுரை புகார் கொடுத்து குற்ற எண். 142/2022ல் சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) என வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் - சரிதான். தங்கதுரை, ஜெகன், மோனிஷா ஆகியோர்களின் மீது என் மகன் விக்னேஷ் குற்ற எண். 143/2022ல் இதச பிரிவுகள் 294(பி), 352, 506(1)ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் - சரிதான். குற்ற எண். 143/2022 வழக்கில் எங்கள் தரப்பில் யாரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவில்லை என்றால் - சரிதான்.

3. குற்ற எண். 142/2022 வழக்கில் தங்கதுரை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றால் - சரிதான். சாட்சி விஜயகுமார் எனது தம்பி என்றால் - சரிதான். சாட்சி பிரகாஷ் எனது சித்தப்பா பையன் என்றால் - சரிதான். சாட்சிகள் முருகன், கருணாநிதி ஆகியோர்களும் எனது உறவினர்கள் தான் என்றால் - சரிதான்.

4. இந்த வழக்கில் எதிரிகள் தாக்கி பயன்படுத்திய இரும்பு கம்பியை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் - தெரியாது. சம்பவ இடமான குறிப்பிடப்படும் மோகன் சிமிண்ட் ஒர்க் என்பது மேற்கு கிழக்கான ரோட்டில் தெற்கு பக்கமாக உள்ளது என்றால் - சரிதான். மோகன் சிமிண்ட் ஒர்க் எதிரில் தான் சம்பவம் என்றால் - சரிதான். சம்பவம் நடக்கும்போது என் மகன் எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி சென்றார் என்றால் - மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்றார். அப்போது நான் எவ்வளவு தொலைவில் வந்துக்கொண்டிருந்தேன் என்றால் - 700 அடி இருக்கும்.

5. சம்பவத்தினை யார் யார் பார்த்தார்கள் என்றால் - இந்திக்காரர்கள் தான் பார்த்தார்கள். அடிப்பட்டவுடன் யார் யார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம் என்றால் - நானும் விஜயகுமாரும். முதன் முதலில் உள்ளிக்கோட்டை மருத்துவமனைக்கு தான் சென்றோம் என்றால் - சரிதான். உள்ளிக்கோட்டை மருத்துவமனையில் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் - 1/2 மணி நேரம் இருக்கும். உள்ளிக்கோட்டை மருத்துவமனைக்கு எத்தனை போலிசார் வந்து விசாரித்தார்கள் என்றால் - 2 போலிசார். நடந்த சம்பவத்தினை யார் போலிசாரிடம் சொன்னது என்றால் - நானும் சொன்னேன் என் மகனும் சொன்னார். அந்த சமயத்தில் என்னிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் - மன்னார்குடியில் வந்து

வாங்கிக்கொண்டார்கள். மன்னார்குடி மருததுவமனைக்கு எத்தனை மணி நேரம் கழித்து வந்தோம் என்றால் - 11.30 மணியிருக்கும். போலிசார் எப்போது வந்தார்கள் என்றால் - 02.00 மணியிருக்கும். மன்னார்குடி மருத்துவமனையிலும் மூன்று பேரிடமும் போலிசார் விசாரித்தார்களா என்றால் - ஆமாம். மூவரிடமும் தனித்தனியாக கையொப்பம் பெற்றுக்கொண்டார்களா என்றால் - ஆமாம். காவல்நிலையம் சென்றோமா என்றால் - இல்லை.

6. எனது மகனின் இடது கை நடுவிரலில் எலும்பு முறிவு ஏற்பட்ட விவரத்தினை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் - சொல்லியுள்ளேன். எனது மகனை எதிரிகள் நால்வரும் ஒரே சமயத்தில் நான் சொன்னவாறு அசிங்கமாக திட்டினார்கள் என்றால் - சரிதான். என் மகனை தாக்கும்போது நானோ என் தம்பியோ சென்று மறைக்கவில்லையா என்றால் - 10 நிமிடங்களில் நடந்த நிகழ்ச்சி தான் இது.

7. உண்மையிலேயே சந்தானகிருஷ்ணனுக்கும் தங்கத்துரைக்கும் தான் இடப்பிரச்சினை என்றும் வழக்கிற்காக எங்களுக்கும் எதிரிகளுக்கும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் - சரியல்ல. இந்த வழக்கிற்கு முந்தை வழக்குகளில் என் மகன் வெளிநாடு செல்ல வேண்டும் என்பதற்காக சமரசம் பேச முயற்சித்து வந்தேன் என்றால் - சரியல்ல. அதற்கு எதிரிகள் ஒத்துவராத காரணத்தினால் தான் இந்த வழக்கினை எதிரிகளின் மீது பொய்யாக போட்டுள்ளேன் என்றால் - சரியல்ல.

8. என் மகன் வாகனத்திலிருந்து கீழே விழுந்த காயத்தினை வைத்து எதிரிகள் தாக்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் - சரியல்ல. அநத காயத்தினை பயன்படுத்தி தான் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டு எதிரிகளின் மீது வலுவாக சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் - சரியல்ல. ராகுல், விக்னேஷ் மற்றும் பாஸ்கரன் ஆகியோர்களை, 1ம் எதிரிக்கு உதவியாக இருந்த காரணத்தினால் இந்த வழக்கில் எதிரிகளாக சேர்த்துள்ளேன் என்றால் - சரியல்ல.

9. உண்மையில் எதிரிகள் என் மகனை தாக்கியதால் அவருக்கு காயங்கள் ஏற்படவில்லை என்றால் - சரியல்ல. சமரசத்திற்கு ஒத்து வராத காரணத்தினால் தான் இந்த வழக்கு பொய்யாக உருவாக்கப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.422/2022 – P.W.2 (LW 3)***

| | |
|---|---|
| *Name* | விஜயகுமார் |
| *Father/Husband's Name* | முருகையன் |
| *Village* | உள்ளிக்கோட்டை |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *36* |

**எதிரிகள் 1, 3 ஆஜர். 2, 4 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 23.04.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். பரோட்டா மாஸ்டராக வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும்.

2. எனது அண்ணன் மகனுக்கும் எதிரிகளுக்கும் இடப்பிரச்சினை சம்மந்தமாக பரவாக்கோட்டை காவல் நிலையத்தில் வழக்கு இருந்தது. அதில் முன் ஜாமின் பெற்று கையொப்பம் போடுவதற்காக என் அண்ணன் மகன் விக்னேஷ் இருச்சக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தார். அவருக்கு பின்னால் நானும் எனது அண்ணனும் மற்றொரு இருச்சக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தோம். அப்போது உள்ளிக்கோட்டை கீழத்தெரு சிமிண்ட் கடை அருகே என் அண்ணன் மகனை எதிரிகள் வழிமறித்து குச்சிக்காரி மவனே தேவடியா மவனே என்று சொல்லி தகாத வார்த்தைகளால் திட்டி தங்கதுரை இரும்பு கம்பியால் என் அண்ணன் மகனின் இடது முழங்கையில் தாக்கினார். விக்னேஷ் என்பவர் அதே இரும்பு கம்பியால் என் அண்ணன் மகனின் முகத்தில் தாக்கினார். பாஸ்கர் என்பவர் என் அண்ணன் மகனை இரும்பு கம்பியால் இடது கால் முட்டியில் தாக்கினார். எதிரிகள் தாக்கியதில் என் அண்ணன் மகனின் இடது கை முட்டி, முழங்கால், மணிக்கட்டு மற்றும் முகத்தில் இரத்தக்காயம் ஏற்பட்டது. மேலும் எதிரிகள் என் அண்ணன் மகனை மிரட்டிவிட்டு சென்றார்கள். நாங்கள் என் அண்ணன் மகனை உள்ளிக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்துச் சென்றோம். பிறகு மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்த்தோம். இது தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில்</u> <u>குறுக்கு விசாரணை</u>**

1. முதல் விசாரணையில் சொன்னது போன்றே எந்தெந்த எதிரிகள் எங்கெங்கு அடித்தார்கள் என்ற விவரத்தினை சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான். மோகன் சிமிண்ட் ஒர்க் அருகில் தான் சம்பவம் நடந்தது என்றால் - சரிதான். விக்னேஷிற்கு எப்போது மயக்கம் தெளிந்தது என்றால் - அன்றைய தினம் 03.00 மணியிருக்கும். என் அண்ணன் மகன் மயக்கமாக இருந்த விவரத்தினை போலிசாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான்.

2. மருத்துவமனைக்கு யார் யார் சென்றோம் என்றால் - நானும் என் அண்ணனும் இருச்சக்கர வாகனத்திலேயே சென்றோம். விக்னேஷ் ஓட்டிவந்த வாகனத்தினை சம்பவ இடத்திலேயே போட்டுவிட்டு சென்றுவிட்டோம் என்றால் - சரிதான். உள்ளிக்கோட்டை மருத்துவமனைக்கு போலிசார் வந்தார்கள் என்றால் - சரிதான். அங்கு விசாரித்து கையொப்பம் வாங்கினார்களா என்றால் - மன்னார்குடி மருத்துவமனையில் கையொப்பம் வாங்கினார்கள். மன்னார்குடி மருத்துவமனைக்கு போலிசார் எப்போது வந்தாரக்ள் என்றால் - மதியம் வந்தார்கள் நேரம் சரியாக தெரியவில்லை. அப்போதுதான் புகார் வாங்கினார்கள் என்றால் - சரிதான். என் அண்ணன் தான் புகார் கொடுத்தாரா என்றால் - இல்லை நான்தான் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரில் என் அண்ணனை விசாரித்தார்கள் என்றால் - சரிதான்.

3. என் அண்ணன் மகன் வெளிநாடு செல்வதற்காக ஏற்கனவே போட்டிருந்த முதல் தகவல் அறிக்கை தடங்கலாக இருந்தது என்றால் - சரிதான். எதிரிகள் எனது உறவினர்களா என்றால் - இல்லை. என் அண்ணன் மகன் வெளிநாடு செல்வதற்காக இந்த வழக்கிற்கு முன்பு போடப்பட்ட வழக்கில் சமரசம் பேச முயற்சித்தோமா என்றால் - இல்லை. என் அண்ணன் மகன் வெளிநாடு செல்ல இயலாத காரணத்தினால் தான் எதிரிகளின் மீது பொய்யாக இந்த வழக்கினை கொடுத்துள்ளோம் என்றால் - சரியல்ல.

4. சம்பவத்தின்போது நானும் என் அண்ணனும் விக்னேஷிற்கு பின்னால் வந்துக்கொண்டிருந்தோம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் - சரியல்ல. நான் சொல்வதுபோன்று சம்பவம் நடைப்பெறவில்லை என்றும் விக்னேஷிற்கு எதிரிகளால் காயம் ஏற்படவில்லை என்று சொன்னால் - சரியல்ல.